Registered as a Newspaper in Sri Lanka. No. A 13.

# ஈழகேசரி

தேசிய கூட்டுறவுச் சபையின் (யாழ் மாவட்டக்குழு) வெளியீடு

மலர் : 29
இதழ் : 5

யாழ்ப்பாணம்
1974
தை



## அமரர் இராசரத்தினம் நினைவு மலர்

# True Cooperator

**P. E. Weeraman**

*Regional Director for S. E. Asia, I. C. A.*

I was shocked by the news, which reached me only on the 10th December, of the passing away of R. Rajaratnam.

Rajaratnam, or Raja as we called him fondly, was a true Cooperator, one who lived and breathed Cooperation. To him it was a way of life, not a mere business operation for eliminating economic exploitation. Nor was he a faddist or an uninformed enthusiast. He knew Cooperation in all its aspects as few did. He could sense any deviation from the true path even before such a proposal was fully explained, and he was one of the few who understood that everything good should not be called "cooperative" and that everything cooperative should be good. He worked for the furtherance of the Cooperative Movement because he firmly believed in the efficacy and justness of the Cooperative method.

He was truly in the tradition of Veerasingham, the first President of the Ceylon Cooperative Federation and undisputed heads of the Cooperative North. Rajaratnam was his pupil both literally and figuratively and he wore with dignity the mantle of leadership when it was put on him in succession to his "Guru". He was not only the President of the Northern Federatlon after Veerasingham, but also the unanimously elected Vice-President of the new National Cooperative Council of Sri Lanka, and this even when the leadership had generally passed into the hands of a younger generation of Cooperators, a well-deserved tribute from the entire Movement of the country.

Above all he was a very human personality. He was extremely loyal to his colleagues, especially those who were his assistants in the task of Cooperative Development. He never ceased to think of their welfare and guide them, and his erstwhile assistants in turn regarded him as their guide, philosopher and friend.

My sense of personal loss cannot be adequately expressed. He was my colleague and Kalyana Mitra. His qualities of head and heart endeared him to me whilst his dedication to duty and sincerity of purpose inspired me continuously, as I am sure they did all who came to know him well.

He rose from the post of Inspector to the high office of Senior Assistant Commissioner in the Cooperative Department rendering yeoman service in all the provinces he served in. He could have lived a life of ease and pleasure after his retirement from government service. But Cooperation was for him not a mere vocation. To him it was his appointed task in life. So he worked zealously to the end in the cause of Cooperation. Had he spared himself he would have lived longer but idle retirement had no appeal for him. The multi-storied edifice which was erected by the Northern Division Cooperative Federation for its headquarters was the result of Rajaratnam's imagination and courage, and his well-placed trust in the loyalty of his fellow cooperators to the common cause It stands today a fitting memorial to his devoted leadership. He was truly a missionary of Cooperation, the like of whom is now very rare in any part of the world.

Our hearts go out in deepest sympathy in their hour of trial to his wife and children for whom he was an exemplary head of family.

As said by the Lord Buddha, the bodies of the dead decay but their names do not.

Let us, his erstwhile fellow cooperators, set up an institution in his name worthy of his spirit of service and designed to further the cause he served so well.

—o—

# PROFOUND KNOWLEDGE OF COOPERATION

G. S. Dayananda
*President, National Co operative Council of Sri Lanha*

It is with a deep feeling of sorrow that I refer to the death of Mr. R. Rajaratnam who was the Vice-President of the Natlonal Co-operative Council of Sri Lanka Ltd.

Having served in the Co-operative Department for over 32 years, he retired as a Senior Assistant Commissioner. In his retirement he devoted his entire spare time for Co-operative work. He functioned as the President of the former Northern Division Co-operative Federation as well as the former Jaffna Co-operative Bank. He was on the Directorate of the People's Bank for a number of years.

Since March 1973 I have been closely associated with Mr. Rajaratnam who was elected Vice-President of the National Co-operative Council. In all deliberations of the Board of Directors, Mr. Rajaratnam was of considerable assistance to me and the rest of the Directors in that his profound knowledge of Co-operation and his practical experience as a Co-operator were available to us.

The Board of Directors of the National Co-operative Council in particular and all Co-operators in Sri Lanka in general, bemoan the loss of a devoted Co-operator in the person of the late Mr. R. Rajaratnam.

"Co-op. House"
Colombo.
13-12-73

# கூட்டுறவுக்கு உழைத்த செம்மல்

சு. கந்தையா
யாழ். ஸ்ரீ லங்கா தேசிய கூட்டுறவுச் சபைத் தலைவர்.

வடபகுதியில் கூட்டுறவு இயக்கம் செழுமையடைவதற்கு உழைத்த கூட்டுறவுப் பெரியார்களில் ஒருவராகிய திரு. இ. இராசரத்தினம் அவர்கள் அண்மையில் காலமாகியமை கூட்டுறவு இயக்கத்திற்குப் பேரிழப்பாகும். வடபகுதி கூட்டுறவு முன்னோடிகள் விட்டுச்சென்ற கூட்டுறவுப் பணிகளைப் தொடர்ந்து ஆற்றிய அவர் கூட்டுறவு உலகில் மறுமலர்ச்சியையும் புதியதோர் ஊக்கத்தையும் மலர்வித்தார்.

**வீரசிங்கத்தை பின்பற்றியவர்**

கூட்டுறவுப் பெரியார் வீரசிங்கம் அவர்களிடம் கல்வி பயின்று கல்வித்துறையில் அவரைச் குருவாகப் பெற்றதிரு. இராசரத்தினம் கூட்டுறவுத்துறையில் இவருடன் சேர்ந்துழைத்து கூட்டுறவிற்கும் வீரசிங்கம் அவர்களைத் தனது குருவாகக் கொண்டு அவர் காட்டிய கூட்டுறவுப் பாதையினைக்கடைப்பிடித்து இறுதிவரை சேவையாற்றினர். தனது எண்ணத்திலும் செயலிலும் கூட்டுறவுச் சிந்தனைகளையே இலட்சியமாகக் கொண்டு கூட்டுறவு வாழ்க்கையினை அவர் வாழ்ந்தார். வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபைத் தலைவராகவும், கூட்டுறவு மாகாண வங்கியின் தலைவராகவும் இவர் பதவிகளை ஏற்ற பின்பு இவரது அயராத உழைப்பினுல் வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபையின் புதிய கட்டிடமும் நவீன வசதிகள் கொண்ட வீரசிங்கம் மண்டபமும் நிறுவப்பட்டன. கூட்டுறவுக் கல்லூரியில் கூட்டுறவுக் கல்விப் பயிற்சிக்கான வசதிகள் வகுக்கப்

பட்டதுடன் அக்கல்லூரியின் கட்டிடங்களும் புதிதாக அமைக்கப்பட்டன.

மட்டக்களப்பு, மன்னார் ஆகிய இடங்களில் கூட்டுறவு மாவட்ட சமாசக் கட்டிடங்களை சிறந்த முறையில் நிறுவச் செய்தார். நாட்டின் சகல பாகங்களிலுள்ள கூட்டுறவாளர்களுடனும் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த இவர், அவர்களின் அன்பையும் மதிப்பையும் பெற்றிருந்தார்.

கூட்டுறவு வங்கியினைப் பொறுத்தவரையில் இவரது சேவை அளப்பரியது. கிராமிய வங்கிகளை நிறுவுவதில் அதிக ஊக்கமெடுத்து அதில் வெற்றி கண்டார். பரந்தனில் புதிய கூட்டுறவு வங்கியினை அழகுற அமைக்க உழைத்தார்.

மக்கள் வங்கியின் நெறியாளர் குழுவில் சேவை புரிந்த திரு. இராசரத்தினம் ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபையின் உபதலைவராக இறக்கும்வரை பணி புரிந்துள்ளார்.

### சிறந்த விளையாட்டு வீரர்

இவர் மானிப்பாய் இந்துக்கல்லூரியில் கல்வி பயின்ற காலத்தில் விளையாட்டுத்துறையில் அகில இலங்கையிலும் சிறந்த வீரராக விளங்கினார். கால்பந்தாட்டக் கோஷ்டிக்கு இவர் கப்டனாக விளங்கினார். அக்காலத்தில் தான் மானிப்பாய இந்துக்கல்லூரி அடுத்தடுத்து ஏழாண்டுகள் கால்பந்தாட்டத்தில் சம்பியனாகப் புகழீட்டியது.

திரு. இராசரத்தினம் ஓர் உயர்ந்த கூட்டுறவாளராகவே எம்மைப் பிரிந்துவிட்டார். எனவே அவர் என்றுமே மறையமாட்டார். அன்னாரின் சேவையைத் தொடருவதே கூட்டுறவாளர்கள் அன்னாருக்குச் செய்யும் கைம்மாறும் அஞ்சலியுமாகும்.

உறங்குவது போன்றது இறப்பு, உறங்கி விழிப்பது போன்றது பிறப்பு — திருவள்ளுவர்

இறையன்பிலே மூழ்கியிருப்பவர்களுக்கு மரணபயம் இல்லை

—மகாத்மா காந்தி

# GENUINE COOPERATOR

M. Sri Khanta

*President, Paranthan District Committee, National Cooperative Council of Sri Lanka*

The late Mr. R. Rajaratnam, or Raja as he was affeetionately called by his close friends, was a genuine Co-operator in every sense of the word. His death is a great loss to the Co-operative Movement in general and to the North and Eastern Provinces in particular. Perhaps the greatest loss after the passing away of his Guru the late Mr. Veerasingham who undoubtedly fostered the spirit of Co-operation and service already latent in him. It may well be said "that some are born Co-operators, others become Co-operators by conviction, others have Co-operation thrust on them, others never imbibe the Co-operative spirit although they are associated with Co-operation for many years.

Raja was a born Co-operator. To him the Co-operative Movement was his very life blood. With a sure instinct and based on his wide experience of villagers and their needs he developed and strengthened the Co-operative Movement step by step from the Credit Society to the Federation and the Co-operative Bank. He boldly ventured out into new fields such as Co-op. Tractor Repair Depots, Stores and Services etc. When the CAPS Societies were launched, he did yeoman service in developing them and making them viable units.

This deep devotion, perseverance and loyalty to his Principal and Guru in Co-operation the late Mr. Veerasingham were dominant traits in his life. The Veerasingham Hall in Jaffna is a lasting token of his Guru Bakthi.

He had a firm belief that in the long run the democratic base was the best foundation for a sound and healthy Co-operative Movement.

Raja's other passion in life was agriculture. Both by example and precept he toiled hard to help farmers and develop agriculture. He induced many friends to take to farming. The farmers of the Eastern and Northern Provinces will always remember him with gratitude.

He was a kind, understanding and loyal friend who went to their rescue in times of difficulties. He bore no ill will towards anyone.

Although Rajah is no more with us in Corporeal form, he lives with us in spirit in the Co-operative Movement that he strove hard to foster and develop. His spirit will certainly guide and console all members of his family and his friends.

May his Soul rest in Peace.

---

# சீராக இயங்கும் கிளைக் குழுக்கள்

இப்பகுதியிலுள்ள கிளைக்குழுக்கள் சீராகவும், சுமுகமாகவும் இயங்கி வருவதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன் என என பச்சிலைப்பள்ளி ப. நோ. கூ. சங்கம் நெறியாளர் குழுவிற்கு நடாத்திய கருத்தரங்கை தொடங்கி வைத்துப் பேசுகையில் பரந்தன் கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் திரு. V. S. இராமநாதன் கூறினார். இக்கருத்தரங்கிற்கு சில நெறியாளர் சமுகமளிக்காததையிட்டு, அவர் வருத்தம் தெரிவித்தார். சமுகமளிக்காதவர்கள் தமக்கு சங்கத்தில் நிறைய அக்கறை உண்டு என்பதைக் காட்டிவிட்டார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார். கருத்தரங்கிற்குத் திரு. A. G. இராசசூரியர் தலைமை வகித்தார்.

தேசிய கூட்டுறவுச் சபை யாழ் கிளைச் செயலாளர் திரு. பொ. செல்லரத்தினம் பேசுகையில் குறிப்பிட்டதாவது: இன்று நாடு மிகப்பாரதூரமான நெருக்கடிக்கு முகங்கொடுத்துக்கொண்டிருக்கிறது. இக்கட்டத்தில் கூட்டுறவு இயக்கத்தின் முத்கியத்துவம் இரட்டிப்பாக அதிகரித்துள்ளது. எனவே நெறியாளர் விவசாயத்தில் கூடிய அக்கறை செலுத்தி உணவுற்பத்தியைப் பெருக்குவதற்கு முயலவேண்டும். நெறியாளர் தமது கடமைகளைச் செவ்வனே நிறைவேற்ற வேண்டுமென்றால் தமது செய்கடமைகளையும், கடமைகளையும் நன்கு உணர்ந்திருத்தல் வேண்டும். இதனால்தான் இத்தகைய கருத்தரங்குகள் இன்றியமையாதவை. கூட்டுறவுச் சங்கங்கள் மக்களின் சகல தேவைகளையும் பூர்த்தி செய்ய முனைய வேண்டும். கூட்டுறவு இயக்கம் வெற்றியீட்டினால்தான் சமுதாயத்தின் நிலையும் உயரும் என அவர் மேலும் பேசுகையில் கூறினார்.

# LIFE-LONG SERVICE

D. E. Hettiarachchi

*Ex-President of the Co-operative Federation of Ceylon and Director, People's Bank*

It is a solace and comfort in grief to write a short memoir as a tribute to a departed comrade who contributed a life-long service to the Co-operative Movement.

I always looked upon the Northern Division Co-operative Federation as a source of inspiration to the co-operators of this country. That was the institution which set an example towards the evolution of an independent democratic movement. R. Rajaratnam was the human link which bound me to it and the brotherhood of co-operators of the North with whom I built up a close and friendly fellowship.

It was as undergraduates of the University College in the early '30 s that I came to know him. Then he was a keen sportsman and excelled in athletics. We parted, he destined to be an official of the Co-operative Department and I to become the Hony. Treasurer of a pilot project in Co-operative Banking in my village. Co-operative Inspectors were sent to my bank for study purposes and young Rajaratnam was one of them. We renewed our old friendship to one of life-long fellowship in the cause of the movement.

His exemplary good services won due recognition and promotions followed in due course till he reached the summit post of Senior Assistant Commissioner. At this stage he changed lines to the unofficial track in his retirement. It was not a slow and sleepy role that he played as a Co-operative Society member. He pushed himself into the movement and became an outstanding leader. He spent a good deal of his time for the welfare of co-operatives in the North and was a popular choice for leading offices such as President of the Northern Federation and the Co-operative Bank of Jaffna. Rajaratnam would have died a richer man if he devoted his years in retirement to his agricultural activities and not served the co-operative movement. Material gains were never his motto. Co-operation was second only to his reli-

gion. He was schooled in the orthodox doctrine of independent, democratic cooperation by his superiors amongst whom were the late Mr. Gunasena de Zoyza. He firmly believed that –

"COOPERATION IS WHAT DISAPPEARS WHEN THE MOVEMENT IS TRANSFERRED TO OFFICIALS AND ALL REAL POWER PASSES OUT OF THE HANDS OF MEMBERS OF CO-OPERATIVES"

As a departmental officer he worked for the deofficialization of the movement. That is the role of an ideal cooperative officer.

"THE VITALITY OF A GENUINE MOVEMENT CAN NEVER BE INJECTED INTO CO-OPERATIVE ORGANIZATIONS THAT ARE ESSENTIALLY AN APPENDAGE OF GOVERNMENT"

The record of Rajaratnam in the movement is unrivalled– Co-operative Inspector, Asst. Commissioner, Senior Asst. Commissioner, Elected President of the Northern Co-operative Federation and Jaffna Co-operative Bank, Director of the Co-operative Federation of Ceylon, Vice-President of the National Co-operative Council of Sri Laka and Director, People's Bank.

He died as Vice-President of the national movement and therefore "not out" in the life-long innings he played so brilliantly. The magnificent building of the Northern National Co-operative Council stands as a memorial to him and his inestimable services to the co-operative movement.

# கலங்கரை விளக்கம்

முகாந்திரம் சி. முத்துக்குமாரு

யாழ்நகர்ப் பகுதியிலும் இலங்கையின் பல பகுதிகளிலும் கூட்டுறவைப் பரப்பி இளமாமதியென எழிலுறத் திகழ்ந்த திரு. இராமலிங்கம் இராசரத்தினத்தை 1946-ம் ஆண்டு தொடக்கம் நான் நன்கு அறிவேன்.

இவர் சமூக முன்னேற்றத்திற்காகவும், கூட்டுறவுப் பகுதியின் முன்னேற்றத்திற்காகவும் அரும்பெருந் தொண்டாற்றிய பெருந்தகையாளர். 1946-ம் ஆண்டில் நீர்வள நிலவளங்களால் சிறப்புற்றேங்கும் கிழக்கு மாகாணத்தை மேற்பார்வையிடும் உதவிக் கூட்டுறவு ஆணையாளராகத் திகழ்ந்தார். பின்னர் தென்கைலாசமெனச் சிறந்தோங்கும் திருக்கோணமலை மாவட்டத்திற்கு உதவிக் கூட்டுறவு ஆணையாளராகப் பதவியேற்ருர். அத்தருணம் திசை தெரியாது புயலிலும், கடும் மழையிலும் அகப்பட்டுத் தத்தளிக்கும் நடுக்கடற் கப்பலுக்குக் கலங்கரை விளக்கம் போல் முன்நின்று எங்கள் பகுதிக் கூட்டுறவுச் சங்கங்களைச் சீர்படுத்தி உடல், பொருள், ஆவி மூன்றலும் அரும்பணியாற்றினர்.

புண்ணியமும் கண்ணியமும் இரு கண்மணிகள் எனக்கொண்டு உயர்ந்தோர், தாழ்ந்தோர், ஏழை எளியோர் இதயமெல்லாம் இன்புற அவர் புரிந்த தொண்டின் பெருமையையும் அவரது குணநலத்தையும் எடுத்தியம்ப இயலாது.

வடபகுதி கூட்டுறவுச் சம்மேளனத்தின் தலைவராகவும், அகில இலங்கைக் கூட்டுறவுச் சம்மேளனத்தின் உபதலைவராகவும்,

மக்கள் வங்கியின் நெறியாளர் குழுவில் ஒருவராகவும், வடக்கு கூட்டுறவு வங்கியின் தலைவராகவும் இவர் புரிந்த சேவைகளின் மகத்துவத்தினைக் கூட்டுறவு உலகம் என்றுமே மறக்காது.

அவர் எங்கெங்கு சென்று பணிபுரிந்தாரோ அவ்விடமெல்லாம் சீரும் சிறப்பும் மேன்மையும் பெற்று விளங்கின.

''நவில்தொறும் நூல்
நயம் போலும்
பயில்தொறும் பண்புடை
யாளர் தொடர்பு''

என்ற தெய்வப் புலவரின் வாக்கிற்கிணங்க, 1948-ம் ஆண்டு அவருடன் எனக்கேற்பட்ட தொடர்பு அவர் சிவபதமடையும் வரையும் நாள்தோறும் வளர்ந்து இனித்துக் கொண்டே வந்தது. எம்மைக் கூட்டுறவுப் பணியில் ஈடுபடச் செய்தவர் அவரே என்பதை யான் என்றும் மறவேன். அவரும் யானும் உடலும் உயிரும் போன்றும் நகமும் சதையும் போன்றும், பூவும் மணமும்போன்றும், நண்பர்களாகப் பழகி வந்தோம்.

இலங்கைக் கூட்டுறவுத் துறையில் ஒரு வீரனாக திரு. வீரசிங்கம் அவர்கள் விளங்கினார். அவரின் கொள்கைகளைக் கடைப்பிடித்து அக்கொள்கைகளுக்குக் கௌரவம் கொடுத்து வந்த பெரியார் திரு. இராசரத்தினம் என்பதை நாம் மறந்துவிட முடியாது.

வடக்கு கூட்டுறவுச் சம்மேளனத்தின் தலைசிறந்து விளங்கும் ஐந்து மாடிக் கட்டிடத்தை திரு. வீரசிங்கம் அவர்களின் ஞாபகார்த்தமாகக் கட்டி எழுப்பிய பெருமகன் திரு. இராசரத்தினம். அவர் சேவை புரிந்த மாவட்டங்களிலே தமது அரும்பெரும் முயற்சியால் பல திருத்தங்களைச் செய்ததுமன்றி பல தாபனங்களையும் ஏற்படுத்தியுள்ளார். அவருக்குப் பகைவர் கிடையாது. அன்னாரின் பிரிவை அறிந்து திருக்கோணமலைக் கூட்டுறவாளர்கள் சகிக்க முடியாத துயரத்திலாழ்ந்தனர். அவருடன் கொண்ட பிரிக்க முடியாத தொடர்பு காரணமாக நான் நெருப்பிலிட்ட மெழுகுபோலுருகி பெருந்துயரடைந்தேன். அவரைப் பிரிந்து கலங்கும் மனைவி மக்களுக்கு வேண்டிய ஆறுதலைக் கொடுத்தருள வேண்டுமென்று எல்லாம் வல்ல கோணேசப் பெருமானை வேண்டுகின்றேன்.

# ஐக்கியத் தொண்டர்

பி. வி. மிக்கேற்பிள்ளை

தமது கடைசி மூச்சுவரை கூட்டுறவு இயக்கத்திற்குத் தொண்டாற்றிய பெரியார் திரு. இ. இராசரத்தினம் மறைந்தமை கூட்டுறவாளர்களுக்குச் சொல்லமுடியாத துக்கமும் நட்டமுமாகும். இவர் ஏறக்குறைய நாற்பது ஆண்டுகளாகக் கூட்டுறவு இயக்கத்தில் ஈடுபட்டு அரும்பெரும் தொண்டாற்றியுள்ளார். நான் அவருடன் முப்பத்துமூன்று வருடங்களாகத் தொடர்பு கொண்டுள்ளேன். அவரை முதன்முதல் ஒரு கூட்டுறவுப் பரிசோதகராக எங்கள் வீட்டில் வரவேற்றேன். எங்கள் ஐக்கிய நாணய சங்கக் கூட்டங்கள் அந்நாட்களில் எங்கள் இல்லத்திலேதான் நடைபெறுவது வழக்கம். எங்கள் சங்கத்தைக் கூட்டுறவுப் பரிசோதகர் திரு. நெவின்ஸ் செல்வத்துரை அவர்கள் ஆரம்பித்தாலும் கூட்டுறவின் அறிவை அமரர் இராசரத்தினம் அவர்களே எமக்கு ஊட்டினுர். அவர் அன்று வவுனியாவிலிருந்து மன்னுர், முல்லைத்தீவுப் பகுதிகளையும் கண்காணித்து வந்தார். அந்தநாளிலிருந்து இந்தநாள்வரையும் அவர் இப்பகுதி மக்களிலும் மீளாத அன்பு பூண்டவராயினுர். சங்கங்களை நிறுவுவதில் கரிசனையுள்ளவராஞர். பெரியார் வீரசிங்கம் அவர்களை முதன்முதலாக இப்பகுதிக்கும், எங்கள் கிராமத்திற்கும் 1942-ம் ஆண்டு கார்த்திகை மாதத்தில் அழைத்துவந்து கூட்டுறவாளர்களுக்கு மாத்திரமல்ல, கிராமவாசிகளுக்கும் அறிமுகப்படுத்தியவர் இவரேயாகும்.

இப்பகுதியில் கூட்டுறவுப் பண்டசாலைகள் நிறுவப்பட்டதும் முல்லைத்தீவில் ஒரு பண்டசாலைச் சமாசம் தேவைப்பட்டது. அதை உண்டாக்கியதும் மொத்த வியாபாரம் ஆரம்பிக்கும் நோக்கமாக ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. அதற்கு திரு. இராசரத்தினம் அவர்கள் கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளராகச் சமுகங் கொடுத்திருந்தார். அதில் இவ்விடயம் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பொழுது கூப்பன் சாமான்களையன்றி வேறு பொருள்களை வாங்கி விற்பதை கூடியதொகையினர் மறுத்தனர். மூன்று

அங்கத்தவர்கள் மாத்திரம் தேவையென்று வாதிட்டனர். விவாதம் முடிந்ததும் அந்த இடத்திலிருந்தே தமது தீர்மானத்தைக் கூறினூர். அதாவது, சமாசத்தின் கௌரவ காரியதரிசி திரு. க. சிவப்பிரகாசத்தையும், தலைவர் திரு. பி. வி. மிக்கேற்பிள்ளையையும் நம்பி இதை ஏற்று உத்தரவு தருகிறேன் என்ருர். அதன்படி மொத்த வியாபாரம் ஆரம்பிக்கப்பட்டது.

இவர் கூட்டுறவு சிரேஷ்ட உதவி ஆணையாளராக உயர் பதவி பெற்றதும் வடக்கு கிழக்கு மாகாணங்களை கூட்டுறவியக்கத்தில் மேலும் முன்னேற்றமடையச் செய்தார். உத்தியோகப் பதவியிலிருந்து இளைப்பாறியதும் பெரியார் வீரசிங்கம் அவர்களின் மறைவின்பின்பு வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபையினதும், யாழ்–ஐக்கிய மாகாண வங்கியினதும் தலைவராஞர். மன்னூர், வவுனியா, முல்லைத்தீவுப் பகுதிகளை இவற்றிலிருந்து பிரிக்காவண்ணம் பேணி வந்தார். கூட்டுறவுத் தந்தை வீரசிங்கம் அவர்களின் மாணவனுகிய இவர், அவரது சேவையைத் தொடர்ந்து தானும் செய்தார். கூட்டங்களிலோ மகாநாடுகளிலோ அவரைப் பற்றிப் பக்தியுடன் பேசி கூட்டுறவை விளக்குவார். ஐந்தடுக்கு மாளிகையாகக் கட்டி முடிக்கப்பட்டிருக்கும் வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபையின் காரியாலயத்துடன் அமைந்த மண்டபத்துக்கு ''வீரசிங்கம் மண்டபம்'' என்னும் பெயர் சூட்டப்பட்டிருப்பதற்கு மூலகாரணம் இவரேயாகும். இவர் அவர்மீது கொண்ட அளவுகடந்த அன்பே இதைச் செய்யத் தூண்டியதாகும்.

வடபகுதி ஐக்கியமேற்பார்வைச் சபையின் 19- 2-71 கடைசிமகாநாட்டின்போது கூட்டுறவுக்கொடி நிருவாக சபையாரின் தீர்மானப்படி என்னுல் ஏற்றிவைக்கப்பட்டபொழுது, நான் பெரியார் வீரசிங்கம் அவர்களைப் பின்பற்றி அவரது கூட்டுறவுப் போதனையைச் சிரமேற்கொண்டு ஒழுகுபவனென்றும் அதனுல் என்னை அவரது சீடனென்று திடமாகச் சொல்லலாமென்றும் சபையாருக்கு அறிமுகப்படுத்தினுர்.

இவர் மக்கள் வங்கியின் இயக்குனர் சபையில் பல வருடங்கள் கடமையாற்றியுள்ளார். வவுனியாவில் ஆரம்பிக்கப்பட்டுக் குறையிலிருக்கும் கூட்டுறவுச் சமாச

அலுவலகக் கட்டிடத்தை கட்டுவதற்கு இயக்குனர் சபைமூலம் உதவிசெய்தார். புதிதாக அமைக்கப்பட்ட ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுப் பேரவையின் பொதுக் கூட்டத்தில் அதன் உபதலைவராக அதிகம் கூடிய வாக்கினுல் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அவர் இடையிடையே எங்களில்லத்தில் என்னைச் சந்தித்து உரையாடுவதுண்டு. அவர் எனக்கு 16-7-73-ல் எழுதிய கடிதமே கடைசிக் கடிதமாகும். அதில் சில விடயங்களுடன், ''நீங்கள், எனதுகுரு அமரர் வீரசிங்கத்தில் வைத்திருக்கும் அழியாத பக்தியை நான் அறிவேன். அவரின் அடிச்சுவடுகளில் நீங்களும் நானும் இன்னும் பலரும் ஒழுகிவருகிருேம். அவர் சொல்வது வழக்கம் 'என் கடன் பணிசெய்து கிடப்பதே' அப்படியே நாங்கள் அனைவரும் நடப்போமாக'' என்றும் குறிப்பிட்டிருந்தார்.

அவர் கொழும்பில் கடுமையான வருத்தத்துடன் இருக்கிருரென்பதை அறிந்த நான், 26-11-73-ல் கொழும்பிலுள்ள அவரது இல்லத்துக்குச் சென்றேன். அவர் அங்கில்லையென்றும் சிகிச்சைக்காக இரத்தினம் வைத்தியசாலையில் இருக்கிரென்றும் அவரது சிரேஷ்ட புதல்வர் கூறினுர். நான் உடனே அவ்விடம் சென்றபொழுது படுக்கையில் கிடந்தார். நான் ஏறக்குறைய பத்து நிமிஷங்கள் வரையில் அவர்முன்பாக நின்று அவருடைய பாரியாருடன் அவரது நோயைப்பற்றி விசாரிக்கும்பொழுது மயக்கம் தெளிந்து என்னைப் பார்த்தார். அந்த முகத்தில் கவலை தோய்ந்திருப்பது தெரிந்தது. என்னில் மெய்யன்பு கொண்ட அந்தப் பெரிய கூட்டுறவாளர் என்னைப் பார்த்த கடைசிப் பார்வை அதுவேயாகும். அவரது கவலையைக் கண்ட அவரது மனைவியார் என்னை விருந்தைக்கழைத்து அவரோடன் புள்ளவர்களைக் கண்டால் தாங்கமாட்டாரென்றும் அதனுல் என்னை அவர் காணுதிருப்பது நலமென்றும் சொன்னுர். அதனுல் நான் சற்றுநேரம் தாமதித்து அவருக்கு திரும்பவும் மயக்கம் வந்ததும் பின்னுமோர்முறை பார்த்துவிட்டுக் கவலையுடன் திரும்பினேன். பின்பு அவரது மரணத்தை வானெலி மூலம் கேட்டுப் பெருங் கவலையடைந்தேன். அவரது ஆத்மா சாந்தியடைவதாக.

# பழம் பெரும் கூட்டுறவாளர்

K. S. பொன்னுத்துரை
(முன்னாள் கூட்டுறவு சிரேஷ்ட உதவி ஆக்க ஆணையாளர்)

பழம்பெரும் கூட்டுறவாளரும் பெருந்தகையாளருமான திரு. இ. இராசரத்தினம் எம்மை விட்டுப் பிரிந்துவிட்டார். கூட்டுறவு, இராசரத்தினம் ஆகிய இருவேறு சொற்களும் ஒரே பொருளையே விசேடமாக வட பகுதியில் குறிக்கின்றன.

1940களின் ஆரம்பப்பகுதியிலிருந்தே திரு. இராசரத்தினத்துடன் எனக்குத் தொடர்பிருந்தது. அப்பொழுது அவர் கூட்டுறவுப்பரிசோதகராகக் கடமையாற்றினார். அக்காலகட்டத்திலே ஐக்கிய நாணய சங்கங்களை அமைப்பதிலும் அவை தொடர்பான விரிவாக்கல் வேலைகளில் ஈடுபடுவதிலுமே அதிக அக்கறை செலுத்தப்பட்டு வந்தது. பாதிரிமாருக்கே உரிய பற்றுர்வத்துடன் கூட்டுறவுத்தத்துவத்தை நாட்டின் மூலை முடுக்குகளிலெல்லாம் பரப்பி வந்தார். அடர்ந்த காடுகளினூடாகவும், செம்மையான வீதிகளற்ற பகுதிகளினூடாகவும் நூற்றுக்கணக்கான மைல்களை அவர் கடந்து சென்று ஏழ்மையில் உழன்ற விவசாயிகளையும், தொழிலாளர்களையும் சந்தித்து ஐக்கிய நாணய சங்கங்களை அமைப்பதற்கு ஏற்பாடு செய்தார். இதன்மூலம் தமது தொழிலை நடாத்துவதற்கு வேண்டிய மூலதனத்தை அவர்கள் நியாயமான வட்டி வீதத்தில் பெறக்கூடியதாக இருந்தது. பாதிரிகளுக்கே உரிய உள்ளப்பாங்குடனும், கடமையுணர்ச்சியோடும் அவர் நேர்மையாகக் கடமையாற்றியதனால் அவர் மக்களின் அன்பிற்கு இலக்காகியதோடு மேலதிகாரிகளின் நம்பிக்கைக்கும் உரியவரானார்.

திரு. இராசரத்தினத்தின் கடும் உழைப்பும், தகமைகளும் வீண் போகவில்லை. இவற்றிற்குக் கைம்மாறாக அவர் 1944ல் சிரேஷ்ட சகாக்கள் எத்தனையோ பேருக்கு மேலாக உதவி பதிவுகாரியஸ்தராகப் பதவி உயர்வு பெற்றார். 1948 தொடக்கம் 1952 வரை அவர் கிழக்கு மாகாணத்திற்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டார். கூட்டுறவுப் பாலைவனமென முன்பு பதிவுகாரியஸ்தர் ஒருவரால் வர்ணிக்கப்பட்ட இம்மாகாணத்தை இவர் இக்கால எல்லையிலேயே முனைப்பான கூட்டுறவு மனப்பான்மை கொண்டதாகத் திகழச் செய்தார். அவரது கவர்ச்சியான பிரச்சாரமும் வெவ்வேறு வகைச் சங்கங்களை அமைப்பதற்கு அவர் கையாண்ட முறைகளுமே இதனைச் சாத்தியமாக்கின. விவசாயத்துறையிலே அவருடைய முக்கிய பங்களிப்புகளில் ஒன்று யாதெனில் கூட்டுறவு உழவு இயந்திர நிலையங்களை நிறுவியமையே. இவற்றின்மூலம் கிழக்கு மாகாண விவசாயிகளுக்கு உழவு இயந்திரங்களை விற்பதற்கும், அவற்றிற்குச் சீர்காப்புச் சேவைகளை ஆற்றுவதற்கும் வழிவகுக்கப்பட்டது. இதன் பயனாக உழுதலும், நிலத்தைப்

பண்படுத்தலும் இயந்திரமய மாக்கப்பட்டன. கமத்தொழிலை இயந்திரமயமாக்குவதில் அவர் வல்லுனரானதும் அப்பொழுது இயங்கி வந்த உணவுற்பத்தித் திணைக்களத்தில் அவர் உதவி ஆணையாளராக நியமிக்கப்பட்டு அனுராதபுரத்தில் நிறுவப்பட்டிருந்த அரசாங்க உழவு இயந்திர நிலையத்திற்குப் பொறுப்பதிகாரியாக்கப்பட்டார். உணவுற்பத்தித் திணைக்களத்தில் அவரது சேவைக்காலம் முடிவுற்றதும் அவர் மீண்டும் கூட்டுறவுத் திணைக்களத்தில் சிரேஷ்ட உதவி ஆக்க ஆணையாளராகப் பதவி உயர்வு பெற்றார். இப்பதவி வகித்த காலத்தில் அவர் தமிழ்ப்பேசும் பகுதிகளிலிருந்த ஏழு கூட்டுறவுப் பிரிவுகளுக்குப் பொறுப்பாக இருந்தார். இப்பதவி வகித்த காலம் கூட்டுறவு இயக்கம்மூலம் அவர் இப்பகுதிகளின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் மக்களின் வளர்ச்சிக்கும் அளப்பரிய தொண்டாற்றினார். கூட்டுறவு வங்கிகள் மக்கள் வங்கியுடன் இணைக்கப்படுவதை அவர் விடாப்பிடியாக எதிர்த்ததன் விளைவாக உரிய காலத்திற்கு முன்பே அவர் தனது உயர் பதவியிலிருந்து ஓய்வு பெறவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ஆனால், அவர் தளரவில்லை. ஓய்வு பெற்றதும் அவர் தனது அன்பிற்குப் பாத்திரவாளிகளான வடபகுதிக் கூட்டுறவாளர்களுடன் தோளோடு தோள் கொடுத்துழைக்க முன் வந்தார். வடபகுதிக் கூட்டுறவாளர்கள் ஏகமனதாக அவரை வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபைத் தலைவராகத் தெரிவு செய்தனர். இப்பதவியிலிருந்துகொண்டு சங்கங்களை அவர் செம்மையாக வழி நடாத்தக்கூடியதாக இருந்தது. அவர் பல்லாண்டுகளாக இலங்கைக் கூட்டுறவுச் சம்மேளனத்தின் நெறியாளராகத் தொண்டாற்றி தனது அப்பழுக்கற்ற குணங்களால் தனது சகாக்களின் அன்பிற்கும் மதிப்பிற்கும் உரியவரானார். மேலும் இருமுறை அடுத்தடுத்து அவர் மக்கள் வங்கி நெறியாளராகத் தெரிவு செய்யப்பட்டார். இப்பதவியை வகிக்கும் காலத்தில் அவர் மக்கள் வங்கியின் கடன் கொள்கையைக் குறித்து கூட்டுறவுச் சங்கங்களின் உரிமைகளுக்கும், சலுகைகளுக்கும் போராடினார்.

அவர் தனக்காகவோ, தனது உற்றார் உறவினருக்காகவோ வாழவில்லை. கூட்டுறவு இயக்கத்தின் உதவியை நாடிய மக்களுக்காகவே அவர் தனது வாழ்வை அர்ப்பணம் செய்தார். கூட்டுறவு இயக்கத்தினூடாக ஏழைகளின் வாழ்க்கைத்தரத்தினை உயர்த்துவதற்கு அவர் தனது நேரத்தையும், சக்தியையும் பணத்தையும் கூடத் தியாகம் செய்தார். கூட்டுறவே ஏழை எளியவர்களுக்குப் பொருளா

தார ஈடேற்றத்தை அளிக்க முடியும் என்பது அவரது அசைக்க முடியாத நம்பிக்கை. ஆனல், அவர் வெறும் இலட்சியவாதியல்ல. செயல்வீரனுகவும் திகழ்ந்தார். கூட்டுறவுச் சங்கங்களுக்கு கலைநயம் பொருந்திய கட்டிடங்களும் சூழலும் இருந்தால் தான் அவை முன்னேற முடியும் என அவர் வாதிடுவார். இத் துறையிலே அவர் மேற்கொண்ட நடவடிக்கை வெற்றியீட்டியது. வீரசிங்கம் மண்டபமும், செயலகமும் கூட்டுறவு இயக்கத்திற்கும் திரு. இராசரத்தினத்திற்கும் அழியா நினைவுச்சின்னம் என்ருல் மிகையாகாது.

அவர் தனது சகாக்களுக்கு நல்ல ஆலோசகராகவும், வழிகாட்டியாகவும் விளங்கினர். இறுதிவரை அவர் செயலாற்றிய வண்ணமே இருந்தார். மனித குலத்திற்குத் தொண்டாற்றுவதே அவரது பணியாக இருந்தது. அவர் உண்மையில் ஒரு கர்மயோகியாக விளங்கினர்.

திரு. இராசரத்தினம் ஒரு தீர்க்கதரிசி என்ருல் மிகையாகாது. இந்து சமயத்தில் அவர் உண்மையான பற்றுக்கொண்டிருந்தார். பல்வேறு தொழில்களிலே அவர் ஈடுபட்டிருந்த போதிலும், அவர் ஆன்மீகத் துறையைப் புறக்கணிக்கவில்லை. தியான மூலமும் வழிபாடு மூலமும் அவரது உள்ளம் சாந்தியடைந்திருந்தது. அகிம்சையைக் கடைப்பிடிப்பதன் மூலம் அந்தராத்மா தூய்மையடையும் என்று அவர் நம்பியதால் மாமிசம் உண்பதைக் கைவிட்டார். அவரது ஆத்மா சாந்தியடைவதாக.

தினமும் தூங்கி வழிந்த உரையாற்றும் பேராசிரியரைவிட ஒரு சோடி செருப்பினைப் புதிதாகச் செய்யும் தொழிலாளி மேன்மையானவன்.

— சுவாமி விவேகானந்தர்

# தன்னலமற்ற சேவை

க. இ. குமாரசாமி

தலைவர், வலி. கிழக்கு (தென்பகுதி) ப. நோ. கூ. ச.
நீர்வேலி.

"யான் அரசாங்க சேவையிலிருந்து விலகவேண்டிய சந்தர்ப்பம் நேர்ந்தது; இவ்வங்கிப் பிரச்சினையால் என்பதனை யான் சொல்வது முறையில்லை. எங்கள் கூட்டுறவு வங்கிகளுக்கு இடையூறு வராது என்ஞலியன்ற ஆவனவற்றைச் செய்வது எனது தொழிலாயிருக்கின்றது."

—25-10-65.

"நான் இங்கு வந்து தோட்டத்தைப் பார்த்து காலத்துக்குக் காலம் ஆவனவற்றைச் செய்யாமல் விட்டபடியால் பல வித நட்டங்கள் ஏற்பட்டன. நட்டங்கள் எவ்வளவென்பதனைக் கவனிக்க இயலாது."

—30-6-68.

கூட்டுறவுப் பெரியார் திரு. இ. இராசரத்தினம் அவர்கள் எமக்கு எழுதிய இரு கடிதங்களின் சில பகுதிகளையே மேலே குறிப்பிட்டுள்ளேன். திரு. இ. இராசரத்தினம் அவர்கள் அரசாங்க சேவையிலிருந்து ஒய்வு பெற்றதும் கூட்டுறவுப் பெரியார்கள் திருவாளர்கள் வி. வீரசிங்கம், அ. அருளம்பலம் என்போரது அடிகளைப்பின்பற்றி வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபையினதும், யாழ்ப்பாணம் கூட்டுறவு மாகாண வங்கியினதும் தலைவராயமர்ந்து கூட்டுறவியக்கத்திற்கு — விசேடமாய் வடபகுதியின் கூட்டுறவியக்கத்துக்கு — செய்த தன்னலமற்ற சேவை அளப்பரியது; கூட்டுறவாளர் மனதிலிருந்து என்றும் நீங்காது.

கூட்டுறவுத்துறையில் யாழ்ப்பாணம் முன்னோடியாகத் திகழ்ந்தது என்று கூறுவது தற்புகழ்ச்சி ஆகாது. இலங்கையில் ஆரம்பிக்கப் பெற்ற கூட்டுறவு மேற்பார்வைச் சபைகளுள் வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபை சிறந்து விளங்கியது என்பதனை வருடாவருடம் ஜூலை மாதங்களில் வடபகுதியில் நடைபெறும் கூட்டுறவாளர்கள் மகாநாடுகளுக்குச் சிறப்புச் சொற்பொழிவாற்றவரும் கூட்டுறவுத் திணைக்கள உயர் பீடங்களிலுள்ளாரும், ஜனநாயகத் தலைவர்களும் கூறப் பலமுறை கேட்டுள்ளோம். குறித்த சபை கூட்டுறவுப் புனரமைப்பின்போது குலைக்கப்பட்டாலும், கூட்டுறவுப் பெரி

யார் வீரசிங்கம் அவர்கள் ஞாபகார்த்தமாக நிறுவப்பெற்ற வீரசிங்கம் மண்டபமும் அதனையொட்டியுள்ள உயர்ந்த மாடிக் கட்டடமும் என்றும் வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபையின் ஞாபகச் சின்னமாகத் திகழ்ந்து கொண்டே இருக்கும்.

கூட்டுறவுச் சங்கங்களுக்கும், விவசாயிகளுக்கும், வேண்டிய கடன் வசதிகளைச் செவ்வனே செய்து வந்ததும், முதலினையும், லாபத்தையும் மாத்திரமே பிரதான நோக்கமாகக் கொண்ட வர்த்தக வங்கிகளின் நடைமுறைக்குப் பலதுறைகளிலும் மாறுபட்டுத் தன்னலமற்ற சேவையாற்றி வந்துள்ளதும் 1929 ல் ஆரம்பிக்கப் பெற்று 41 வருடங்களுக்கு மேலாகச் சேவையாற்றி 8 லட்சம் ரூபா வரை அடக்கப் பணமும் வருடம் 24 கோடி வரை கொடுக்கல் வாங்கல் உடையதாய் எட்டுக் கிளைகளினூடாகத் தன்னலமற்ற சேவையாற்றி வளர்ந்திருந்ததுமான யாழ்ப்பாணம் கூட்டுறவு மாகாண வங்கியின் சேவையைக் கூட்டுறவாளர் என்றும் நினைவு கூருவர். இலங்கையில் தொடங்கப் பெற்ற கூட்டுறவு வங்கிகள் யாவும் மூடப்பட்டும், அரசாங்கம் கையேற்கும் நிலைகள் உருவான போதும் தனித்து நின்று தனிமரத் தோப்பாய் வடபகுதிக்கு நிழல் கொடுக்கச் செய்த பெருமையில் திரு. இ. இராசரத்தினம் அவர்களுக்கே ழக்கிய பெருமையுடையது.

அவர் கடைசியாக, ''இந்த நாட்டின் கூட்டுறவுப் பராம்பரியமும், இந்த வங்கி ஆரம்பித்த நம்முன்னோர்களின் நல்லெண்ணமும் பாதிப்படையாது இந்த நாட்டின் ஜனநாயக பாரம்பரியத்திற்கு அமைவாக கூட்டுறவியக்கம் தொடர்ந்தும் தனது கொள்கையில் சென்று கொண்டிருக்க எமது கூட்டுறவு மாகாண வங்கியின் பாதுகாப்பிற்காவன செய்யப்படல் வேண்டும் ''என்று கூட்டுறவுத் திணைக்கள அதிகாரியவர்களுக்கு விடுத்த வேண்டுகோள் சிந்திக்கப்படவேண்டியதொன்றாகும்.

கூட்டுறவு மாகாண வங்கியின் இறுதிக்காலத்தில் சுன்னாகம் கிளை தனக்கென ஒரு கட்டிடத்தை நிறுவ சுன்னாகம் சந்தைக்கருகே நிலத்தைப் பெரும் பிரயாசையோடு கொள்வனவு செய்து அக்காணியில் வங்கியோடு ஒரு கூட்டுறவுச் சந்தை நிறுவவும் திட்டமிடப்பட்டிருந்தது. வங்கி திடீரெனச் சுவீகரிக்கப் பெற்றதோடு குறித்த திட்டமும் கவனிக்கப்படாதிருந்து வருகின்றது. குறித்த வங்கியைச் சுவீகரிதத மக்கள் வங்கியார் அல்லது ஸ்ரீலங்கா தேசீயக் கூட்டுறவுச் சபையார் தொடர்ந்தும் முயற்சித்து குறித்

தபடி கூட்டுறவுச் சந்தையினை நிறுவ ஆவன செய்ய வேண்டுவது கூட்டுறவாளர் கடமையாகும். மேலும் யாழ்ப்பாணம் கூட்டுறவு மாகாண வங்கியால் வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபைக்கு அளித்த வீரசிங்கம் மண்டபத்திற்கு மேற்குப் புறமாய் உள்ள காணியில் கூட்டுறவுக் கலாசாலையும் நூல் நிலையமும் விடுதியும் முன்னர் திட்டமிட்டபடி அமைக்க முயற்சிப்பதும் வடபகுதிக் கூட்டுறவாளரின் கடமையாகும்.

காட்டு மிருகங்களைப் பிடிக்க விரும்புவோர் அவ்வினத்து மிருகங்களைப் பழக்கி அதன் துணைகொண்டு பிடிப்பர். ஆன்மாக்களைத் தம்வசப்படுத்தி ஆட்கொள்ளுவதற்காக திருவருள் குருவடிவம் தாங்கி வெளிப்படும். அக்குருவடிவத்தைத் தம்மைப் போன்ற மானிடராக மதித்து உலகோர் மயங்குவர் என்கின்றது சைவசித்தாந்தம்.

"பார்வை யென முன் பற்றிப்
பிடித்தற்காம்
போர்வையெனக் காணுர் புவி"
திருவருட்பயன்.

உண்மையான கூட்டுறவாளர்களை நுணுகியாராய்ந்து அவர்களை மதித்து கூட்டுறவியக்கத்தினுள்ளே புகுத்தி அவர்கள் சேவை தொடர்ந்தும் இயங்கச் செய்தபணி திரு. இ. இராசரத்தினம் அவர்கள் செய்த கைம்மாறில்லாத் தொண்டாகும். இந்த வகையில் கூட்டுறவியக்கத்தின் சேவையாளர் பலருக்கு ஒரு முன்மாதிரியானவராய், வழிகாட்டியாய் விளங்கினுர். கூட்டுறவு மகாநாடுகள், கூட்டுறவுத் தினவிழாக்கள், கருத்தரங்குகள் பயிற்சி வகுப்புக்கள் முதலியவற்றைக் காலத்திற்குக் காலம் வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபை ஆதரவில் யாழ்ப்பாணத்தின் பல இடங்களிலும் நடாத்தி கூட்டுறவியக்கத்தில் படிந்திருந்த மாசுகளை அகற்றி கூட்டுறவியக்கம் புனிதமும் பூரணத்துவமுடையதாய் விளங்க இறுதி மூச்சு வரை உழைத்த பெரியார் மறைந்துவிட்டார். கலங்கரை விளக்கமாயிருந்த கூட்டுறவுத் தீபமொன்று அணைந்துவிட்டது. அவர் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக. அவரையிழந்து துயருறும் சுற்றத்தார்க்கு ஆறுதல் கூறுவோம். அவர் காட்டிய புனிதமான கூட்டுறவு வழியை நாமும் பின் தொடர்வோம்.

# அமரரான கூட்டுறவுக் கோமான்
# இராசரத்தினம் அவர்கள் பேரில்
# நினைவாஞ்சலி

**பண்டிதர் க. யோ. ஆசிநாதர்**

கூட்டுறவின் நாயகனாய்த் துலங்கி நின்று
கூட்டுறவு வாழ்வினிலே திளைத்து வாழ்ந்து
கூட்டுறவுத் தளபதியாய்த் திகழ்ந்து வென்று
கூட்டுறவு வித்தகனாய் விளங்கி வந்து
கூட்டுறவுச் சேவகனாய்ச் சேவை செய்து
கூட்டுறவுப் பணிக்காக உயிரை ஈய்ந்த
கூட்டுறவுப் பெருமானார் இராச ரத்னக்
குலமகனின் மறைவென்றும் மறக்கப் போமோ?

'நாட்டுயர்வைக் கூட்டுறவு ஒன்றினாற்றான்
நாட்டிடலாம்' என்றவொரு மந்தி ரத்தைத்
தீட்டிவைத்த செயல்வீரன்; சேவைச் செம்மல்;
தெளிவான கொள்கைவழி வாழ்ந்த வள்ளல்;
கேட்டவர்கள் வியந்துரைக்கும் பேச்சு வல்லோன்;
கிட்டாத பதவிகளை வகித்த நல்லோன்;
கூட்டுறவின் முன்னோடி; இராச ரத்னப்
பெருமகனின் மறைவெமக்குப் பேரி ழப்பாம்.

அரசாங்க பதவிகளில் அமர்ந்தி ருந்தார்
ஆணையாளர் உதவியராய் உயர்ந்தி ருந்தார்
பெருமையுறு மக்கள்வங்கிப் பெரியோ ரானார்
பெருந்தலைவர் மேற்பார்வைச் சபைக்கே யானார்

உருப்படுத்தி வைத்தஐக்ய வங்கி தன்னின்
ஒப்பற்ற தலைவராய் ஒளிர்ந்து நின்றார்
பெருத்துவந்த தேசியச் சபையிற் றானும்
பெரும்பதவி வகித்துவந்தார் பெருமை யாக!

வீரசிங்க மண்டபத்தை அமைத்து மேலும்
வேறுவங்கிக் கட்டிடமும் சமைத்த பேறும்
சீரமைப்புக் கூட்டுறவுக் கல்லூ ரிக்குச்
சிறப்பான நிலைவகுத்த திறமைப் பண்பும்
தீரமுற வெளியிட்ட புதினத் தாளும்
தினமானம் இவன்நாமம் தெரித்து நிற்கும்
ஈரநெஞ்சன் கூட்டுழைப்புத் தலைவனான
எம்ராச ரத்தினத்தை நெஞ்சில் வைப்பாம்!

பெரியார்கள் மறைந்தாலும் மரிப்ப தில்லை
பெயரவரின் செயல்வழியில் என்றும் வாழும்
உரிமையுற அவர்வாழ்ந்த வாழ்வை ஒட்டி
உண்மையுடன் ஒழுகுவதே கடமை யாகும்
அரியவழி கூட்டுணர்வுப் பான்மை கொள்ளல்
ஆனமட்டும் கூட்டுழைப்புத் தன்மை மேவி
பெருமையுற வாழ்வதுவே அன்னா ருக்குப்
பேர்பெரிய கைம்மாறாய் அமையு மாமே.

வல்லவனும் கூட்டுறவின் இராச ரத்ன
வள்ளலிவன் நாமமெம்முள் நிலைக்க வேண்டும்
நல்நினைவுச் சின்னங்கள் நிறுவ வேண்டும்
நாடெங்கும் இவன்திறனைப் பரப்ப வேண்டும்
சொல்லுவதில் செய்கையதில் இவனைப் போல
சோர்வின்றி உழைக்கின்ற ஓர்மம் வேண்டும்
பல்விதத்தும் எவ்விடத்தும் இவனை எங்கள்
ஏந்தலெனக் கண்டடையும் இதயம் வேண்டும்.

# Amiable and Unassuming

P. B. W. Kinigama

*General Secretary, National Cooperative Council of Sri Lanka.*

I have been very closely associated with the late Mr. R. Rajaratnam for an uninterrupted period of nearly 43 years.

I first met him as an under - graduate at the then Ceylon University and both of us resided at the Union Hostel the Warden of which was Professor C. Sunthera-lingam. During our Varsity days, we under - graduates adored Rajah as a champion athletic. He was a sprinter and high jumper of great repute. I believe he held the All Ceylon Record way back in 1930 for 100 yards, 220 yards and high jump. I can still rememer how he gracefully cleared some 6 ft. and thereby became the Champion High Jumper of Ceylon.

After leaving the University, we were again associated with each other in the Co-operative Department. By dint of sheer hard work and perseverance, he was able to get a promotion to the rank of Senior Assistant Commissioner. Since his retirement from the Co-operative Department, he was closely aasociated with the Co-operative Movement particularly the Northern Division Co-operative Federation, Jaffna, People's Bank and the Co-operative Federation of Ceylon.

At the time of his death, he was the Vice-President of the newly constituted National Co-operative Council of Sri Lanka.

He was an amiable and an unassuming person. His good qualities endeared him to all and sundry. I am reminded of the Chinese proverb "The taller the bamboo grows the lower it bends" Although both in the official and unofficial sectors of the Co-operative Movement Rajah reached the highest level, he continued to be the very embodiment and personification of humility.

With his demise I have lost a good friend and the Co-operative Movement a good and devoted co-operator.

# கிராமமக்களுக்கு உறுதுணையாக உழைத்த கூட்டுறவாளர்

**T. மயில்வாகனம்**

தமிழ் பேசும் கிராம மக்களை 1932-ம் ஆண்டு தொடக்கம் ஐக்கியப் பண்பில் வாழ வழிநடாத்திய நவாலியூர் திரு. இ. இராசரத்தினத்தின் மரணச் செய்தியை அறிந்தவுடன் கூட்டுறவாளர் உலகம் கலங்கியது. திரு. இராசரத்தினம் கூட்டுறவுப் பரிசோதகராக இருந்தகாலத்தில் மன்னார், வவுனியா, முல்லைத்தீவுப் பகுதிகளில் வசித்த நெல் உற்பத்தியாளர் நெல் விற்பனவு செய்வதற்கு ஐக்கிய சங்கங்களைத்தாபித்து யாழ்ப்பாணத்தில் நெல் வியாபாரம் மூலம் நல்ல விலை பெற்றுக் கொடுத்தார். அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு வீடு வசதி இல்லாத காலத்தில் வவுனியாப் பட்டினத்திற்கு அருகாமையிலுள்ள வெளிக்குளம் என்னும் கிராமத்தில் ஒரு வளவினை வாங்கி வீடு அமைத்து கூட்டுறவாளர் கொண்டாடும் நிலையம் ஆக்கிவிட்டார். இதனால் வவுனியாப்பகுதி மக்கள் எங்களுடைய இராசரத்தினம் என்று அழைத்தனர். இரண்டாவது உலக யுத்த காலத்தில் கூட்டுறவுப் பண்டசாலைகள் பெறும் பொருள்களை சமபங்கீட்டுப் பணியில் ஒழுகுவதற்கு வடமாகாண கூட்டுறவு மேலதிக உதவிப்பதிவு காரியஸ்தராகப் பதவி வகித்தார். 1948-ம் ஆண்டு தொடக்கம் இலங்கையின் நெல்லுக் களஞ்சியமாக விளங்கும் கிழக்கு மாகாணத்தில் நெல் உற்பத்தியாளருக்குத் தீவிரமாகச் சேவைபுரிய வாய்ப்புப் பெற்றார். பல கிராமங்களிலும் பிரமாண்டமான நெற் களஞ்சியங்களைத் தோற்றுவித்து விவசாயிகள் செல்வந்தர்களாக மேலோங்குவதற்கு உறுதுணை புரிந்தார். அந்தக் காலத்தில் உழவுயந்திரங்களைக் கூட்டுறவு உற்பத்தி விற்பனவுச் சங்கங்களுக்கு அரசாங்கத்திடம் பெற்றுக்கொடுத்து கிழக்குமாகாணத்தில் விவசாயப் புரட்சியை ஆரம்பித்து வைத்தார்.

1954-ம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் 1959-ம் ஆண்டு வரை திரு. நா. மாணிக்க இடைக்காடர்

அவர்களது உணவு உற்பத்தித் திணைக்களத்தில் உதவி அதிபராகக் கடமையாற்றி இலங்கை விவசாயிகளின் அன்பைப் பெற்றார். பின்னர் கூட்டுறவுத் திணைக்களத்தில் சிரேஷ்ட உதவி ஆணையாளராக வவுனியாவில் பணி புரிகையில் விவசாயிகள் உணவு உற்பத்தி செய்வதற்கு உதவினார்.

கூட்டுறவுத் தந்தையாக விளங்கிய மானிப்பாய் திரு வி. வீரசிங்கம் அவர்களின் மறைவுக்குப்பின் வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபையின் தலைவராகப் பொறுப்பேற்று கூட்டுறவுக் கல்விப் பணியை விருத்தி செய்து இளம் சமுதாயத்தை ஐக்கியப் பண்பில் நம்பிக்கை கொள்ள முயற்சி செய்தார்.

இத் தொண்டர் அறிவிலும், ஆற்றலிலும் செயலிலும், இனிமையிலும் மேலோங்கிச் சென்ற பாதையை நாங்கள் அனைவரும் பின்பற்ற வேண்டும். இவரது முயற்சியால் யாழ்ப்பாணத்தில் கட்டப்பட்ட தேசீய கூட்டுறவுச் சபையின் ஐந்து மாடிக்கட்டிடம் கூட்டுறவுப் பண்பின் நூதனசாலையாக விளங்குகிறது.

காலந்தவறாது நீராடுவதும், காய்கறி வகைகளை உண்பதுமே முக்தியளிக்கும் என்று நினைத்தால் மீன்களுக்கும், குரங்குகளுக்குமே முதலில் முக்தி கிடைக்கும்.

— சுவாமி விவேகானந்தர்

# கேள்விப்பத்திர அறிவித்தல்

## பள்ளிப்பருவம் எய்தாத பிள்ளைகளுக்கான மலகூட அமர்வுத் தட்டுக்களும் வயது வந்தோர்களுக்கான மலகூட அமர்வுத் தட்டுக்களும் பெய்குழாய்களும்

பதிவு செய்யப்பட்டுள்ள கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து பின்வருவனவற்றை வழங்குவதற்கான கூறுவிலைகள் **உதவிப் பணிப்பாளர்** (சுற்றுடற் சுகாதாரமும் கல்வியும்), **சுகாதார சேவைகள் திணைக்களம்**, த. பெ. 500, கொழும்பு என்ற முகவரியில் 1974, ஜனவரி 10 ஆம் திகதி பிற்பகல் 3-00 மணிவரைக்கும் ஏற்றுக் கொள்ளப்படும் :-

1. (அ) பள்ளிப் பருவம் எய்தாத பிள்ளைகளுக்கான மலகூட அமர்வு தட்டுகளுக்கும் பெய்குழாய்களுக்குமான விலை.

   (ஆ) சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகத்தில் ஒப்படைத்தற்கான செலவுகள்.

   (இ) பொது சுகாதார சோதனைகாரரின் அலுவலகத்தில் ஒப்படைத்தற்கான செலவுகள்.

2. (அ) வயது வந்தோருக்கான மலகூட அமர்வுத் தட்டுக்கான விலை,

   (ஆ) சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகத்தில் ஒப்படைத்தற்கான செலவுகள்.

   (இ) பொது சுகாதார சோதனைகாரரின் அலுவலகத்தில் ஒப்படைத்தற்கான செலவுகள்.

3. (அ) வயது வந்தோருக்கான பெய்குழாயின் விலை.

   (ஆ) சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகத்தில் ஒப்படைத்தற்கான செலவுகள்.

   (இ) பொது சுகாதார சோதனைகாரரின் அலுவலகத்தில் ஒப்படைத்தற்கான செலவுகள்.

4. (அ) வயது வந்தோருக்கான மலகூட அமர்வுத் தட்டினதும் பெய்குழாய்க் கூற்றினதும் விலை,

   (ஆ) சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகத்தில் ஒப்படைத்தற்கான செலவுகள்.

   (இ) பொது சுகாதார சோதனைகாரரின் அலுவலகத்தில் ஒப்படைத்தற்கான செலவுகள்.

# கூட்டுறவுச் செய்திகள்

## உறுப்பினர்களுக்கிடையே ஏற்றத்தாழ்வு இருக்கக்கூடாது

நியமிக்கப்பட்ட உறுப்பினர்களுக்கும், தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்குமிடையே எந்தவித ஏற்றத்தாழ்வுகளும் இல்லை. இருத்தலாகாது. நெறியாளர்குழு ஒன்றுதான் என்பதைச் சகல நெறியாளர்களும் உணர வேண்டும் என சுன்னுகம் ப.நோ.கூ. சங்கக் கருத்தரங்கில் பேசுகையில் யாழ். கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் சி. நாகலிங்கம் கூறினார். அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது: நெறியாளர் குழு கிளைக்குழுக்களுக்கும், கிளைகளுக்கும் தகுந்த முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

தேசிய கூட்டுறவுச் சபை யாழ் கிளைச் செயலாளர் திரு. பொ. செல்வரத்தினம் கூறியதாவது: உறுப்பினர்களின் தேவைகளை நெறியாளர்குழு கிளைகளின் ஊடாகப் பூர்த்தி செய்ய விழைய வேண்டும், ஐயுறவுகளைக் களைவதற்கு இதுபோன்ற கருத்தரங்குகள் அவசியம்.

## தொழிலாளர் வாசிகசாலை

ஊர்காவற்றுறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் நிறுவியுள்ள வாசிகசாலையை அண்மையில் யாழ் கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் திரு. சி. நாகலிங்கம் திறந்து வைத்தார்.

# கூட்டுறவுக் கல்வி அவசியம்

கூட்டுறவு இயக்கத்தோடு தொடர்புள்ள சகலருக்கும் கூட்டுறவுக் கல்வி அத்தியாவசியம் என புலோலி ப. நோ. கூ. சங்கக் கருத்தரங்கில் பேசியபோது திரு. T. கந்தசாமி யாழ் கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில் சங்கம் வெற்றிகரமாக இயங்குவதற்கு நெறியாளர் குழு செம்மையாக இயங்கவேண்டுமென்று சுட்டிக்காட்டினர்.

தேசீய கூட்டுறவுச் சபை யாழ் கிளைச் செயலாளர் திரு. பொ. செல்வரத்தினம் கூறியதாவது: கூட்டுறவு இயக்கம் வெற்றியீட்டினல்தான் சமுதாயத்தில் வாழ்க்கைத்தரம் உயரும். நெறியாளர் குழுவிடம் மக்கள் ஒரு பெரும் பொறுப்பை ஒப்படைத்துள்ளனர். இதனைச் செவ்வனே நிறைவேற்றுவதற்கு நெறியாளர் தமது செய்கடமைகளையும் நன்கு அறிந்திருத்தல் வேண்டும். காரியாலயப் பரிசோதகர் திரு. V. E. சண்முகமும் உரையாற்றினர்.

# இன்றைய கூட்டுறவு அமைப்பு

இன்றைய கூட்டுறவு அமைப்பு எமது வாழ்க்கையில் முக்கிய பங்கு வகிக்கின்றது என்று யாழ் ஸ்ரீ லங்கா தேசீய கூட்டுறவுச் சபைக் காரியதரிசி திரு. பொ. செல்வரத்தினம் உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கத்தின் பொதுக் கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

சங்கத்தலைவர் திரு. ஜெயராசா கூட்டத்திற்குத் தலைமைவகித்தார்.

கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் திரு. T. கந்தசாமி தனது உரையில் உடுப்பிட்டி ப.நோ கூ. சங்கத்தின் வளர்ச்சி மெச்சத்தக்கதாக உள்ளது என்று குறிப்பிட்டார். சங்கத்தின் 1974-ம் ஆண்டிற்கான வரவுசெலவு மதிப்பீட்டுத் திட்டம் பொதுச்சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இயக்குநர்களுக்கான கருத்தரங்கு மாலையில் நடைபெற்றது.

(முற்றொடர்)

# இலங்கைக் கூட்டுறவு இயக்கம்:

## தோற்றுவாயும் வளர்ச்சியும்

(G. குருகுலசூரியா யாத்த நூலைத்தழுவி எழுதப்பட்டது)

1942 க்கும் 1945 க்கு மிடையில் சில பகுதிகளிலே குறிப்பிடத்தக்க பெறுபேறு கள் கிடைக்கப் பெற்றன. ஆண்டறிக்கையிலே ஆணை யாளர் சந்தலங்காவ பகுதி யை விசேடமாகக் குறிப் பிடுகின்ருர். எல்லாப் பொ ருளாதார முயற்சிகளையும் கூட்டுறவு அடிப்படையிலே நடாத்துவதற்கு அவற்றினை ஒருங்கிணைத்து திட்டமிடு வதற்கு உள்ளூர் தலைவர் கள் அதிக கவனமெடுத்தி ருக்கின்றனர் என ஆணை யாளர் குறிப்பிடுகின்ருர். அப்பகுதியைப்பற்றி அவர் மேலும் கூறியதாவது: பல கடனுதவு சங்கங்கள் நல்ல முறையிலே இயங்குகின் றன. இருபத்தொரு கிளைக ளைக் கொண்ட திறம் பட நடாத்தப்படும் பெரிய பண்டசாலைச் சங்கம் முழுப் பகுதிக்கும் சேவை ஆற்று கின்றது. இப்பகுதியிலே விளையும் தெங்குப் பொருள் களை திறமையாக நடாத் தப்படும் தெங்கு விற்பனைச் சங்கம் கையாளுகின்றது. ஒரு நெசவுச் சங்கமும் உண்டு. இவை யாவும் சிறந்த தலைமையின் மூலம் பயன் முனைப்பான முறையிலே ஒருங்கிணைக்கப்பட்டிருக்கின் றன. சந்தலங்காவின் கூட் டுறவு இயக்கம் உண்மை யில் முன்மாதிரியான ஒன் ருய் திகழ்கின்றது.

கூட்டுறவு இயக்கம் எவ் வாறு ஒரு கிராமத்தினைச் சீர்திருத்தியது என்பதைப் பற்றியும் ஆணையாளர் தனது அறிக்கையிலே குறிப் பிட்டிருக்கிருர். அந்தக் கிராமத்திற்கு 'கோயத' என்ற புனைபெயரைச் சூட்டி அவர் பின்வருமாறு எழுதினுர். இரண்டு ஆண்டு களுக்கு முன்பு 'கோயத' கூட்டுறவு இயக்கத்திற்கு அந்நியமான ஒன்ருய் இருந் தது. திணைக்களத்தைச் சேர்ந்த விடாப்பிடியரான ஓர் இளம் உத்தியோகத்தர்

இந்நிலையினை வெற்றிகரமாக மாற்றினர். நற்குணம் படைத்தவர்களுக்குத்தான் அங்கு சங்கங்களிலே உறுப்புரிமை வழங்கப்பட்டு வந்ததினல் சங்கத்தில் உறுப்புரிமை பெறுவதே மிகப் பெரிய கௌரவம் என கிராமவாசிகள் கருதினர். இன்று இங்குள்ள சிக்கன கடனுதவு சங்கங்களிலே 500 உறுப்பினர்களுக்குமேல் இருக்கின்றனர். மாதர் சிக்கனச் சங்கங்களில் மட்டும் 18 ஆயிரம் ரூபாய்க்குமேல் சேமிப்புப் பணமாக உள்ளது. இப்பகுதி ஒரு காலத்திலே சூதிற்கும், குடிவெறிக்கும், சண்டை சச்சரவுக்கும் களவுக்கும் பேர் போயிருந்தது. ஆனல், இன்றோ இத்தகைய குற்றச் செயல்கள் அருகிவிட்டன என பொலிஸ் உத்தியோகத்தர்களே ஒப்புக்கொள்கின்றனர். எனவே, கூட்டுறவு இயக்கம் இக்கிராமத்தின் சமூக, பொருளாதார அபிவிருத்தியிலே பெரும் பங்கு எடுத்துள்ளது என்பது வெள்ளிடைமலை.

**கூட்டுறவுக் கடனுதவியும் சிக்கனமும்**

1945 ம் ஆண்டு ஏப்ரல் இறுதியில் மட்டுப்படுத்தப்படாத உத்தரவாதமுடைய 1697 சங்கங்கள் இருந்தன. உறுப்பினர் தொகை 49638. தொழிற்படு முதல் ரூ. 2777307/- 1944/45 ம் ஆண்டிலே வழங்கப்பட்ட கடன் தொகை ரூ. 3,076,802/-. அப்பொழுது மக்கள் கைகளிலே ஏராளமான பணம் புழங்கியதாலும், போர்க்கால முயற்சிகளால் பூரண வேலை வாய்ப்புக்கள் இருந்தமையாலும் கடனுதவு சங்கங்களின் தொழிற்பாடுகள் சற்று தளர்ந்திருந்தன. எனினும், சிக்கன சங்கங்கள் செழித்தோங்கின. அவற்றின் தொழிற்படு முதலும் குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்திருந்தது.

இக்கால கட்டத்தில் கடன்களைத் திருப்பிக் கொடுக்கும் நிலையும் உயர்ந்தது. அறவிடப்படாத கடன் தொகை சராசரி 16 வீதமாக வீழ்ச்சியுற்றது. 1942 ல் கடன் தொகை சராசரி ரூ 53 ஆக இருந்தது. இக்கால எல்லையில் அது ரூ. 70/- ஆக உயர்ந்தது. மேலும், 30 ஆண்டு காலமாக நிலவி வந்த கொள்கையை மாற்றியமைத்து கடனுதவு சங்கங்களின் ஆரம்ப வட்டி வீதம் 12 வீதத்திலிருந்து 9 வீதமாகக் குறைக்கப்பட்டது.

கடன் பெறும் நோக்கங்களைப் பொறுத்தவரை மட்டுப்படுத்தப்படாத உத்

தரவாதமுடைய சங்கங்கள் வழங்கிய கடன்களில் 43.8 வீதம் விவசாயத்திற்காகவும் 24 வீதம் வியாபாரத்திற்காகவும் 6.1 வீதம் நிலத்தைத் திருத்துவதற்கோ அல்லது குத்தகைக்கு எடுப்பதற்காகவும் 5.2 வீதம் மாடுகளை வாங்குவதற்காகவும் வழங்கப்பட்டன. 4.3 வீத கடன்களே உற்பத்திப் பயனற்ற கடன்களாக இருந்தன.

1942/43 ல் இருந்து 1944/45 வரையிலான கால எல்லையில் மட்டுப்படுத்தப்படாத உத்தரவாதமுடைய கடனுதவு சங்கங்கள் 111 ல் இருந்து 114 ஆக உயர்ந்தன. வைப்புப் பணம் கணிசமாக உயர்ந்த போதிலும், அவற்றின் தொழிற்பாடுகள் மந்தமாகவே இருந்தன.

செப்டெம்பர் 1942 ல் மட்டக்களப்பில் நான்காவது கூட்டுறவு மத்திய வங்கி பதிவு செய்யப்பட்டது. கூட்டுறவு மத்திய வங்கிகளின் வைப்புப் பணம் அதிகரித்ததோடு, அவற்றின் தொழிற்பாடுகளும் பெருகின.

| கூட்டுறவு மத்திய வங்கி | வழங்கப்பட்ட கடன்கள் | | வைப்புப்பணங்கள் | |
|---|---|---|---|---|
| | 1942–43 | 1944–45 | 1942–43 | 1944–45 |
| யாழ்ப்பாணம் | 642,397 | 8,403,205 | 1978,541 | 6466,190 |
| கொழும்பு | 578,369 | 5,349,890 | 88,856 | 711,002 |
| கண்டி | 226,149 | 578,835 | 205,280 | 281,556 |
| மட்டக்களப்பு | — | 83,935 | — | 279,827 |

கூட்டுறவு நிதிகளைக் கட்டுப்படுத்துவதற்கும், அவற்றிற்கிடையே இணைப்பை ஏற்படுத்துவதற்கும் ஓர் உச்ச வங்கி நிறுவப்படுவது இன்றியமையாததாகிற்று. அகில கூட்டுறவு உச்ச வங்கி ஒன்றினை கால்கோள் செய்வது பற்றி தீவிரமாக ஆலோசிக்கப்பட்டு வந்தது.

இதற்கிடையில் உள்ளூர் கடன் அபிவிருத்தி நிதி சங்கங்களுக்கு நிதியுதவி அளித்து வந்த போதிலும், அது சிறு தொகையாகவே இருந்து வந்தது. 1944 ம் ஆண்டு செப்டெம்பர் 30 ம் திகதிவரை இந்நிதி சங்கங்களுக்கு வழங்கிய நிதியுதவியின் மொத்தத் தொகை ரூ. 110,250/. புறநடையாக இந்நிதி யாழ்ப்பாண மலையாளம் புகையிலை விற்பனைக் கூட்டுறவுச் சங்கத்திற்கு 1943/44 ல் இரண்டு இலட்சம் ரூபாவைக் கடனாக வழங்கியது. (வளரும்)

# முன்பைவிட விரிவான குறிக்கோள்கள்

கூட்டுறவுச் சங்கங்கள் அரசாங்கக் கொள்கைகளைச் செயற்படுத்துவதற்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என கட்டைவேலி நெல்லியடி ப. நோ. கூ. ச. கருத்தரங்கில் பேசுகையில் யாழ் கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் திரு. T. கந்தசாமி பேசுகையில் குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில் மறுசீரமைக்கப்பட்டுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு முன்பைவிட மிக விரிவான குறிக்கோள்கள் இருக்கின்றன என்று சுட்டிக்காட்டினார்.

கருத்தரங்கிற்குச் சங்கத் தலைவர் திரு. குலநாயகசிங்கம் தலைமை வகித்தார். கருத்தரங்கு ஆரம்பிக்கு முன்பு அண்மையில் மறைந்த கூட்டுறவுத் தலைவர் திரு. இ. இராசரத்தினத்திற்கு நினைவு அஞ்சலி செலுத்தப்பட்டது. திரு. இராசரத்தினத்தின் அரும்பெரும் தொண்டுகளைப் பாராட்டிப் பேசிய திரு. செல்லையா அன்னாரின் திருவுருவப்படம் வீரசிங்கம் மண்டபத்தில் திரைநீக்கம் செய்யப்பட வேண்டும் என்று குறிப்பிட்டார். தேசிய கூட்டுறவுச் சபை யாழ்கிளைச் செயலாளர் திரு. பொ. செல்வரத்தினம் பேசுகையில் கூறியதாவது: நாம் எப்போதும் மாணவர்களாக இருந்து எப்போதும் கற்கத்தயாராக இருக்க வேண்டும். இத்தகைய கருத்தரங்குகளிலேயிருந்து நாம் ஒவ்வொருவரிடமிருந்து எவ்வளவோ கற்றுக் கொள்ளலாம். மறு சீரமைக்கப்பட்ட சங்கங்களுடாக நெறியாளர் மக்களுக்கு எல்லையற்ற தொண்டாற்றலாம். நெறியாளர் கப்பலோட்டிகள் போன்றவர்கள். சங்கத்தைச் செம்மையாக நடாத்தும் பொறுப்பு அவர்களைச் சார்ந்தது. இன்றைய நெருக்கடியான கட்டத்தில் சங்கங்கள் உணவுற்பத்தியில் கூடுதலான கவனம் செலுத்த வேண்டும். தலைமைக் காரியாலயப் பரிசோதகர் திரு. V. E. சண்முகம் நெறியாளர் கடமைகளையும் செய் கடமைகளையும் விளக்கினார்.

# வடபகுதிக் கூட்டுறவாளர் உழைப்பின் சின்னம்
# வீரசிங்கம் மண்டபம்

**அரங்க அமைப்பு　　ஆசன அமைப்பு**
**மின்னொளி அமைப்பு**

அத்தனையும் கலையழகுடன் அமைந்த மண்டபம்

## வாடகைக் கட்டணங்கள்

| | | |
|---|---|---|
| **நாடகம், நடனம்** | | |
| | இரவு 5 மணித்தியாலங்களுக்கு மேற்படாத காலம் | 250-00 |
| | பகல் ,, ,, | 200-00 |
| **இசை நிகழ்ச்சிகள்** | | |
| | இரவு ,, ,, | 175-00 |
| | பகல் ,, ,, | 150-00 |
| **ஏனைய நிகழ்ச்சிகள்** | | |
| | இரவு முதலாவது மணித்தியாலம் | 100-00 |
| | (மேலதிக நேரம் அல்லது பகுதி நேரம்) 1 மணித்தியாலம் | 40-00 |
| | பகல் முதலாவது மணித்தியாலம் | 75-00 |
| | (மேலதிக நேரம் அல்லது பகுதிநேரம்) 1 மணித்தியாலம் | 30-00 |
| **திருமணம் – பகல் அல்லது இரவு** | | |
| | முதல் 3 மணித்தியாலங்கள் | 250-00 |
| | (மேலதிக நேரம்) 1 மணித்தியாலம் | 50-00 |
| **பீனை** | இரவு | 150-00 |
| | பகல் | 100-00 |

குறிப்பு: கட்டணம் முழுத்தொகையும் நிகழ்ச்சி நிகழவிருக்கும் திகதிக்கு முன்பே செலுத்தப்படவேண்டும்.


தொலைபேசி:
7238

தேசிய கூட்டுறவுச் சபை (யாழ் மாவட்டக்குழு
12, காங்கேசன்துறைவீதி,
யாழ்ப்பாணம்.

கூட்டுறவுத்தொடர்பு ஒரு நல்ல தொடர்பு

## வடபகுதி விவசாய
## உற்பத்தியாளர் கூட்டுறவுச் சமாசம்
## அகில இலங்கை
## கூட்டுறவு நுகர்ச்சியாளர்
## சமாசத்துடன்

இணைந்து தற்பொழுது

# ஸ்ரீலங்கா கூட்டுறவு
# சந்தைப்படுத்தும் சம்மேளனமாக

இயங்கி வருகின்றது.

இவ்விணைப்பு

உற்பத்தியாளரையும், நுகர்ச்சியாளரையும்

மேலும் நெருங்கிய தொடர்புகொள்ள

உதவியளிக்கின்றது.

உங்கள் வருங்காலத்திட்டத்தைக் கூட்டுறவுக்கூடாக அமையுங்கள்.

திறமான சேவை, பாதுகாப்பு, வெற்றிக்கு,

ஸ்ரீலங்கா கூட்டுறவுச் சந்தைப்படுத்தும்

சம்மேளனத்தை ஆதரியுங்கள்,

## ஸ்ரீலங்கா கூட்டுறவுச் சந்தைப்படுத்தும் சம்மேளனம்

| | |
|---|---|
| *127, கிரான்பாஸ் வீதி,* | *111, பிரதான வீதி,* |
| **கொழும்பு 14.** | **யாழ்ப்பாணம்.** |
| தொலைபேசி 25642-24991 | தொலைபேசி 504 |
| தந்தி "கொன்கம்" | தந்தி "அப்பீஸ்" |

Published by the Jaffna District Committee, National Co-operative Council of Sri Lanka Ltd., (formerly known as the Northern Division Co-operative Federation, Ltd.), 12, K.K.S. Road, Jaffna and printed at the J. Municipality M.P. C. S. Ltd., Printing Branch, The Co op. Printers, Jaffna. (formerly Northern Province Co-operative Printing and Publishing Society Ltd.)